# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092349

1. District : மாவட்டம் புதுக்கோட்டை PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 03/2020 Date: நாள் 18.09.2020

2. (i) Act சட்டம்: Cr.pc and Pc (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 102 Cr.p.c r/w 7 of

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Prevention of Corruption

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.09.2020 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.45 hrs. Time to : நேரம் வரை 15.30 hrs.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மண்டல மேலாளர் அலுவலகம், தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் லிமிடெட், அறந்தாங்கி 35 km கிழக்கு.

   Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி –

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. ந. கனகமாணிக்கம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. நடராஜன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் துணை ஆய்வு குழு அலுவலர், த.க.ப. (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. வள்ளிக்கண்ணு, க/பெ: நாச்சியப்பன், கண்காணிப்பாளர், மண்டல மேலாளர் அலுவலகம், தமிழ்நாடு வனத்தோட்ட கழகம், லிமிடெட், அறந்தாங்கி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   –

Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

... / ... சொத்துக்களின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)

கைப்பற்றப்பட்ட பணம் ரூ 50,000/-

Total value of properties stolen / involved :

... / ... சொத்துக்களின் மொத்த மதிப்பு

Inquest Report / Un-natural death Case No. if any:

... அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

FIR Contents (Attach separate sheet if required)

(முதல் தகவல் அறிக்கையின் ... தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

இன்று (18–09–2020)ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து காலை 10.45 மணி முதல் மதியம் 15.30 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், மண்டல மேலாளர் அலுலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து 17.30 மணிக்கு ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனு பின்வருமாறு:– அனுப்புநர் திரு.ந.கனக மாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருச்சிராப்பள்ளி பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் சாலையில் KVKS கல்யாண மண்டபம் அருகில் இடது புறம் உள்ள கிழக்கு பார்த்து தரைத்தளம் மட்டும் உள்ள மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், அறந்தாங்கி

Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........ Rank ........ to take up the Investigation / Refused investigation / transferred to ........ on point of jurisdiction.

... மேலே கூறப்பட்டுள்ள பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு ... / பணிக்கப்படுகிறது ........ பதவி ........ நிலை ... பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

... தகவல் அறிக்கை ... படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ... நகல் இலவசமாக கொடுக்கப்பட்டது.

Signature / Thumb Impression of the Complainant / Informant

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலர் ஒப்பம்

18/9/20

Date & Time of despatch to the court

18.09.2020

Name: கோ. மணிகண்டன்,

Rank: காவல் துணைக்கண்காணிப்பாளர்

ஊ.த.க. பிரிவு,

புதுக்கோட்டை.

அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள்/குத்தகைதாரர்கள் ஆகியோரிடம் காசோலை மற்றும் பணம் விடுவிப்பதற்காக கமிஷன் பெறுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின்பேரில், எனது தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.G.மணிகண்டன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.வி.தமிழரசி ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டோம். திடீர் சோதனையின் போது மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம், அறந்தாங்கி அலுவலகத்தில் தரைத்தளத்தில் உள்ள கிழக்கு பக்கம் வாயில் கொண்ட மண்டல மேலளார் அலுவலகத்தினுள் 1) திருமதி.வள்ளிச்கண்ணு, க/பெ நாச்சியப்பன், கண்காணிப்பாளர், 2) திரு.ஜெயக்குமார், த/பெ நந்தகுமார், இளநிலை உதவியாளர், 3) திருமதி.லெ.மகாலெட்சுமி, க/பெ லெஷ்மணன், தற்காலிக இளநிலை உதவியாளர், 4)திருமதி.சுதா, க/பெரமேஷ், தற்காலிக இளநிலை உதவியாளர், 5) திருமதி.அங்கையர்கண்ணி, க/பெ பாலசந்தர் தற்காலிக தட்டச்சர், 6) திருமதி.ரெங்கநாயகி, க/பெ துரைராஜ், தற்காலிக இளநிலை உதவியாளர் ஆகியோர் அலுவலகத்தில் அவரவர் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

மேலும் வனச்சரக மண்டல மேலாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த 1) திருமதி.வள்ளிச்கண்ணு, க/பெ நாச்சியப்பன், கண்காணிப்பாளர் என்பவரிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் தன்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர் ஆகியோரையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரத்தை கூறி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திடீர் ஆய்வின் போது கண்காணிப்பாளர் திருமதி.வள்ளிக்கண்ணு என்பவரிடம் மண்டல மேலாளர் பற்றி கேட்க, மண்டல மேலாளர் பணியிடம் காலியாக உள்ளது என்றும், விழுப்புரம் மண்டல மேலாளர் கூடுதல் பொறுப்பில் உள்ளார் என்றும் தெரிவித்தார்.

அதன் பிறகு வனசரக மண்டல மேலாளர் அலுவலகத்தில் இடது புறத்தில் அமர்ந்திருந்த அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.வள்ளிக்கண்ணு என்பவரை காவல் ஆய்வாளர் திருமதி.வி.தமிழரசி என்பவர் சோதனை செய்ய அவரது மெருன் கலர் லெதர் கைப்பையின் உள்ளே இருந்த மணிபர்ஸில் ரூ.240/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க மேற்படி பணம் தனது கைச்செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்தாக கூறினார். அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.240/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த கைப்பையில் IDBI அறந்தாங்கி கிளை வங்கி கணக்கு எண்.1378104000040105ன் வங்கி கணக்குப்புத்தகம் மற்றும் 21.02.2017ஆம் தேதியில் எடுக்கப்பட்ட வங்கி கணக்கு விபரப்பட்டியல், எல்.ஐ.சி பாலிசி

எண்.753143277ன் ரெனிவெல் ரசீதுகள் 0136283, 0192721, எல்.ஐ.சி பாலிசி எண்.753410188ன் பிரிமியம் செலுத்துவதற்கான அஞ்சலக கடிதம் ஆகிய ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது மேஜையில் இருந்து வருகைப்பதிவேடு (2018-2020), 21.08.2020 மற்றும் 24.08.2020, 04.09.2020 முதல் 16.09.2020, 08.05.2020 முதல் 30.05.2020, 01.06.2020 முதல் 29.06.2020, 01.07.2020 முதல் 31.07.2020 வரை கொண்டு ஒப்பந்ததாரர்களின் விபரப்பட்டியல் மற்றும் 14.08.2020 முதல் 26.08.2020, 04.09.2020 முதல் 16.09.2020, 08.05.2020 முதல் 30.05.2020, 11.03.2020 முதல் 24.03.2020, 01.06.2020 முதல் 29.06.2020, 01.07.2020 முதல் 31.07.2020 வரை உள்ள காசோலை வழங்கிய விபரப்பட்டியல் ஆகியவற்றை கண்காணிப்பாளர் ஆஜர் செய்தார். மேற்கண்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

அதில் வருகைப்பதிவேட்டை பரிசீலனை செய்த போது அலுவலலில் இருந்த மேற்கண்ட நபர்கள் அனைவரும் சுருக்கொப்பம் செய்திருந்தனர். அதில் அலுவலக ஓட்டுநர் திரு.B.கிருஷ்ணமூர்த்தி என்பவரும் சுருக்கொப்பம் செய்திருந்தார். ஆனால் அவர் அலுவலகத்தில் இல்லை. இது குறித்து கண்காணிப்பாளரிடம் கேட்ட போது கண்காணிப்பாளர் அலைபேசி மூலம் பேசிய பின்னரும் ஓட்டுநர் கிருஷ்ணமூர்த்தி அலுலகத்திற்கு வரவில்லை. மேலும் அலுவலக Movement Register, தனிநபர் கையிருப்பு , பதிவேடு மற்றும் மருத்துவ விடுப்புப் பதிவேடு பற்றி கேட்க, அதற்கு கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என தெரிவித்தார்.

மேலும் அவரது மர மேஜை மேல் வைக்கப்பட்டிருந்த ப்ரௌன் கலர் லெதர் பேக்கின் உள்ளே இருந்த மஞ்சள் நிற துணிப்பையில் ரூ.7,175/- பணம் இருந்தது. அதை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க மேற்படி பணம் அலுவலக பணம் என்று கூறினார். மேலும் அலுவலக ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்த போது 16.09.2020ஆம் தேதிய இருப்பு ரூ.10,951/- என்றும், மேலும் 17.09.2020ஆம் தேதி அன்று செலவு ரூ.3,718/- என்றும் எழுதப்பட்டிருந்தது. அன்றைய கணக்கு முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்தது. மேற்கண்ட தொகையை கணக்கிட்டு பார்த்ததில் ரூ.7,233/- இருப்பு தொகை இருக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட கைப்பற்றி தொகை ரூ.7,175/- மட்டுமே இருந்தது. ரொக்கப்பதிவேட்டின்படி இருக்க வேண்டிய தொகைக்கு ரூ.58/- குறைவாக இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்க அவர் சரியான விளக்கம் கொடுக்கவில்லை. மேலும் மேற்கண்ட பணம் ரூ.7,175/- அலுவலக பணம் என்பதால் கண்காணிப்பாளர் திருமதி.வள்ளிக்கண்ணு என்பவரிடம் பணம் மற்றும் அலுவலக ரொக்கப்பதிவேடு திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் அவர் அமர்ந்திருந்த அலுவலக இருக்கைக்கு முன்புறம் இருந்த அவரது மர மேஜையின் இடது புற டிராவை திறந்து சோதனை செய்ய அதில் 500 ரூபாய் நோட்டுகள் கொண்ட இரண்டு கட்டுகள் இருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க ஒரு கட்டில் ரூ.30,000/–ம் மற்றொரு கட்டில் ரூ.20,000/–ம் ஆக மொத்தம் ரூ.50,000/– இருந்தது. அந்த ரூ.50,000/–ஐ பற்றி அவரிடம் விளக்கம் கேட்க அவர் அப்பணம் தன்னுடையது இல்லையென்றும், அந்த பணம் பற்றி முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாததால் மேற்கண்ட பணம் ரூ.50,000/– கைப்பற்றப்பட்டது.

மேலும் கண்காணிப்பாளர் இருக்கைக்கு பக்கத்தில் இடது புற இருக்கையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.ஜெயக்குமார் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.512/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க, தனது ஊர் கீரமங்களம் என்பதால் மாலை தான் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு திரும்பி செல்லும் போது தனது இரு சக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட எடுத்து வந்ததாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.512/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

மேலும் இளநிலை உதவியாளர் திரு.ஜெயக்குமார் என்பவர் இருக்கைக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த தற்காலிக இளநிலை உதவியாளர் திருமதி.மகாலெட்சுமி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.10/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க, தனது டீ செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.10/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடமிருந்த அலுவலக சிறு விடுப்பு பதிவேடு கைப்பற்றப்பட்டது.

மேலும் தற்காலிக இளநிலை உதவியாளர் திருமதி.மகாலெட்சுமி இருக்கைக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த தற்காலிக இளநிலை உதவியாளர் திருமதி.சுதா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.24/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க, தனது கைச்செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.24/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

மேலும் அலுவலக வலது புறத்தில் உள்ள அறையில் அமர்ந்திருந்த தற்காலிக தட்டச்சர் திருமதி.அங்கையர்கண்ணி என்பவரின் சாம்பல் நிற கைப்பையை சோதனை செய்ய அவரிடம் ரூ.63/– இருந்தது. மேலும் அவரது பூப்போட்ட வெள்ளை, மஞ்சள் மற்றும் நீல நிறம் உள்ள மணிபர்சை சோதனை செய்ய அதில் ஒரு ஐந்து ரூபாய் நாணயமும், ஒரு இரண்டு ரூபாய் நாணயமும், இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களும் ஆக மொத்தம் ரூ.9 இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க, தனது கைச்செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.63/–ம், ரூ.9/–ம் ஆக மொத்தம் ரூ.72/–ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

மேலும் அலுவலக பின்புறம் உள்ள வனசரகர் அறைக்கு எதிரே உள்ள அறையில் அமர்ந்திருந்த தற்காலிக இளநிலை உதவியாளர் திருமதி.ரெங்கநாயகி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.20/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க, தனது கைச்செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.20/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

இந்த திடீர் ஆய்வின் போது கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து வருகைப்பதிவேடு (2018-2020), 21.08.2020 மற்றும் 24.08.2020, 04.09.2020 முதல் 16.09.2020, 08.05.2020 முதல் 30.05.2020, 01.06.2020 முதல் 29.06.2020, 01.07.2020 முதல் 31.07.2020 வரை கொண்டு ஒப்பந்ததாரர்களின் விபரப்பட்டியல் மற்றும் 14.08.2020 முதல் 26.08.2020, 04.09.2020 முதல் 16.09.2020, 08.05.2020 முதல் 30.05.2020, 11.03.2020 முதல் 24.03.2020, 01.06.2020 முதல் 29.06.2020, 01.07.2020 முதல் 31.07.2020 வரை உள்ள காசோலை வழங்கிய விபரப்பட்டியல், அலுவலக சிறுவிடுப்புப் பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது.

இச்சோதனையில் முடிவில் அறந்தாங்கி மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், அறந்தாங்கி அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரியும் திருமதி.வள்ளிக்கண்ணு என்பவர் ஒப்பந்ததாரர்கள்/குத்தகைதாரர்கள் ஆகியோரிடம் காசோலை மற்றும் பணம் விடுவிப்பதற்காக கமிஷனாக பெற்ற பணம் ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.வள்ளிக்கண்ணு என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (திரு.ந.கனக மாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருச்சிராப்பள்ளி).

மேற்படி புகார் மனுவை பெற்று இன்று 18.09.2020ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 03/2020 பிரிவு 102 கு.வி.மு.ச உ/இ 7 of PC (Amendment) Act-2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. S/d. திரு.G.மணிகண்டன், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை நாள்.18.09.2020.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையின் அசல்களை புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

DSP VAC
(G.MANIKANDAN)
18/9/20